**நவம்பர் – 14**

# TNPSC துளிகள்

- புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மாணவிகளுக்கு பாதுகாப்பான, ஆதரவான சூழலை உருவாக்கும் நோக்கத்தில், புதுக்கோட்டை மாவட்டக் காவல்துறையானது ‘காவல்துறை அக்கா’ என்ற திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே அணைக்கரை எனுமிடத்தில் கொள்ளிடம் ஆற்றில் நிலவி வரும் மனித-முதலை மோதலைக் குறைப்பதற்காக வேண்டி வனத் துறையானது முதலைகள் வளங்காப்பு மையத்தினை அமைக்க உள்ளது.
- கிராண்ட்மாஸ்டர் அரவிந்த் சிதம்பரம், 2024 ஆம் ஆண்டு சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார் என்ற நிலையில் கிராண்ட் மாஸ்டர் V பிரணவ் சேலஞ்சர்ஸ் பிரிவில் பட்டத்தை வென்றார்.
- தமிழ் எழுத்தாளர் பெருமாள் முருகனின் மாதொருபாகன் என்ற புதினம் லெடிசியா இபானெஸ் என்பவரால் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
- இந்திய சாலைகள் மாநாட்டுக் கூட்டத்தின் நான்கு நாட்கள் அளவிலான 83வது வருடாந்திர அமர்வு ஆனது சத்தீஸ்கர் மாநிலத்தின் ராய்ப்பூர் நகரில் நடைபெற்றது.
- நவிகா சாகர் பரிக்ரமா 2 எனப்படும் உலகளாவிய சுற்றுப்பயணத்தை மேற் கொண்டு உள்ள இந்தியக் கடற்படையின் INSV தரிணி என்ற கப்பல் ஆனது, ஆஸ்திரேலியாவில் உள்ள அதன் முதல் இடைநிறுத்தத் துறைமுகத்தை வந்தடைந்தது.
- அனிஷ் சர்க்கார் என்ற இந்தியச் சதுரங்க வீரர், அவரது மூன்று வயதில் சர்வதேசச் சதுரங்கக் கூட்டமைப்பினால் தரவரிசைப் படுத்தப்பட்ட உலகின் இளம் சதுரங்க வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- எஜுகேஷன் வேர்ல்டு அமைப்பின் 2024-2025 ஆம் ஆண்டு உலக இந்தியப் பள்ளிகள் தர வரிசை விருதுகளில், JBCN கல்வி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் குணால் தலால், ஆண்டின் சிறந்த கல்வித் தலைவராகக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- முன்னாள் இந்திய போலோ வீரரும் அர்ஜுனா விருது பெற்றவருமான ஹரிந்தர் சிங் சோதி சமீபத்தில் காலமானார்.
- ஹிண்டால்கோ இண்டஸ்ட்ரீஸ் நிறுவனமானது, 2024 ஆம் ஆண்டு S&P உலகப் பெரு நிறுவன பொறுப்பு மதிப்பீடு (CSA) தரவரிசையில் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக உலகின் மிகவும் நிலையான அலுமினிய உற்பத்தி நிறுவனமாக தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## ஊரக மேம்பாட்டுத் துறையின் சாதனைகள் 2024

- எட்டு மாவட்டங்களில் எட்டு புதிய சமத்துவபுரங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தப் புதிய சமத்துவபுரங்களுக்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தூய்மை பாரதம் என்ற திட்டத்தின் (கிராமப்புறம்) கீழ், 2021-22 ஆம் ஆண்டு முதல் 2.43 லட்சத்திற்கும் அதிகமான கழிவறைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.
- நமக்கு நாமே என்ற திட்டத்தின் கீழ் 6,400க்கும் மேற்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு 5,700க்கும் மேற்பட்ட பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- ‘கலைஞரின் கனவு இல்லம்’ என்ற திட்டத்தின் கீழ், 2024-25 ஆம் ஆண்டில் மொத்தம்

3,500 கோடி ரூபாய் செலவில் 1 லட்சத்துக்கும் மிக அதிகமான கான்கிரீட் (பைஞ்சுதை) வீடுகள் கட்டமைக்கப்பட உள்ளன.

- கிராமப்புறங்களில் பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 2024 ஆம் ஆண்டு மே 07 ஆம் தேதி முதல் அக்டோபர் 03 ஆம் தேதி வரை 3.30 லட்சம் வீடுகள் கட்டமைக்கப் பட்டுள்ளன.
- ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் உள்ள சுமார் 7.15 லட்சம் வீடுகளுக்கு மொத்தம் 2,123 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்கீடு உறுதி செய்யப்பட்டுள்ளது.



## இந்து வாரிசுரிமைச் சட்டம் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பு




- 1956 ஆம் ஆண்டின் இந்து வாரிசுரிமைச் சட்டத்தில், 2005 ஆம் ஆண்டில் மத்திய அரசு மேற்கொண்ட ஒரு திருத்தம் என்பது, இறந்தக் கூட்டுடைமையுரிமையின் இன மரபு உரிமையாளரின் சொத்துக்களில் மகன்களுக்கு வழங்கப்படுவது போலவே சமமானப் பங்கைப் பெறுவதற்கான உரிமையை மகள்களுக்கும் வழங்குகிறது.
- ஆனால், இந்தச் செயல்பாடானது, முதலாம் வகை சட்டப்பூர்வ வாரிசுகள் என்ற ஒரு தகுதியில் விதவை மற்றும் தாய் ஆகியோர் பெற வேண்டிய சொத்தின் அளவைக் குறைய வழி வகுக்கிறது.
- இந்த 1956/2005 ஆம் ஆண்டு சட்டம் ஆனது உயில் எதுவும் இன்றி உயிரிழந்த இந்துக்கள்,

சீக்கியர்கள், சமணர்கள் மற்றும் பௌத்தர்களுக்குப் பொருந்தும்.

# தேசியச் செய்திகள்

## விலங்குகளின் ஆரோக்கியத்தை கண்காணிப்பதற்குப் புதிய திட்டம்




- ‘தொற்றுநோய்க்கான தயார்நிலை மற்றும் எதிர் நடவடிக்கைகளுக்காக இந்தியாவில் விலங்குகளின் சுகாதாரப் பாதுகாப்பை வலுப்படுத்துதல்’ என்ற முன்னெடுப்பினை மத்திய அரசு தொடங்கியுள்ளது.
- இது "விலங்குவழியிலான சுகாதார அச்சுறுத்தல்களைத் தடுத்தல், கண்டறிதல், எதிர் நடவடிக்கை மேற்கொள்தல்" ஆகியவற்றில் நாட்டின் திறனை மேம்படுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது 2022 ஆம் ஆண்டில் இந்தோனேசியாவின் தலைமைத்துவத்தின் கீழ் G20 அமைப்பின் உறுப்பினர் நாடுகளால் உருவாக்கப்பட்ட பெருந்தொற்று நிதியத்தால் அங்கீகரிக்கப்பட்டது.
- இந்த நிதியின் அடிப்படை நோக்கம் ஆனது குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு எதிர்காலப் பெருந்தொற்றுகளை அடையாளம் காணவும், அது குறித்து அறிக்கையிடவும் மற்றும் கட்டுப்படுத்தவும் அவற்றின் திறனை வலுப்படுத்த உதவுவதாகும்.
- ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB), உலக வங்கி மற்றும் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) ஆகிய மூன்று அமலாக்க முகமைகளின் உதவியுடன் இந்த திட்டம் செயல்படும்.
- இது 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.


## மாற்றுத் திறனாளிகளுக்கான அணுகல் - உச்ச நீதிமன்றம்

- சூழல்கள், சேவைகள் மற்றும் வாய்ப்புகளை அணுகுவதில் மாற்றுத் திறனாளிகளுக்கு வேண்டிய உரிமை ஆனது அத்தியாவசியமான மனித மற்றும் அடிப்படை உரிமை என்பதை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- டெல்லியில் பொதுப் போக்குவரத்திற்காக 3,775 தாழ்தள சக்கர நாற்காலிகளை இயக்கக் கூடிய வகையிலான CNG எரிபொருளில் இயங்கும் பேருந்துகள் உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 1,917 பேருந்துகள் மட்டுமே உள்ளன என்று நீதிமன்றம் பதிவு செய்தது.

- அனைவருக்கும் அணுகக் கூடிய பொது மற்றும் தனியார் இடங்கள், சேவைகள் மற்றும் "அனைவருக்கும் உகந்த வடிவமைப்பு சார்ந்த" தயாரிப்புகளை உருவாக்குமாறு உச்ச நீதிமன்றம் அரசாங்கத்திடம் கூறியுள்ளது.




## மருத்துவத் துறைக்கான புதியத் திட்டம்



MEDTECH BOOST

| Scheme component | Outlay (in ₹ cr) |
|---|---|
| Common facilities for medical device clusters | 110 |
| Marginal Investment Scheme to reduce import dependence | 180 |
| Capacity Building and Skill Development | 100 |
| Medical Device Clinical Studies Support Scheme | 100 |
| Medical Device Promotion Scheme | 10 |

Source: Govt

Total outlay 500

- மருத்துவ சாதனத் தொழில் துறையினை வலுப்படுத்துவதற்காக மத்திய அரசு ஆனது 500 கோடி ரூபாயில் மத்தியத் திட்டத்தை சமீபத்தில் அறிமுகப்படுத்தியது.
- இது வளர்ச்சியை விரைவுபடுத்தி, இறக்குமதியினைச் சார்ந்திருக்கும் நிலையினைக் குறைத்து, மருத்துவச் சாதனங்களின் ஒரு முன்னணி ஏற்றுமதியாளராக இந்தியாவின் நிலையை மேம்படுத்தும்.
- இந்தியாவின் மருத்துவச் சாதனச் சந்தையின் மதிப்பு தோராயமாக 14 பில்லியன் டாலர் மற்றும் 2030 ஆம் ஆண்டில் சுமார் 30 பில்லியன் டாலராக உயரும் என எதிர் பார்க்கப் படுகிறது.
- இந்தப் புதிய திட்டம் ஆனது ஐந்து துணைத் திட்டங்களைக் கொண்டுள்ளது-
    - மருத்துவச் சாதன உற்பத்தித் தொகுதிகளுக்கான பொதுவான வசதிகள்,
    - இறக்குமதியினைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கான பல்துறை முதலீட்டுத்

திட்டம்

- மருத்துவச் சாதனங்களுக்கான திறன் உருவாக்கம் மற்றும் திறன் மேம்பாடு.
- மருத்துவச் சாதன மருத்துவ ஆய்வுகள் ஆதரவு திட்டம் மற்றும்
- மருத்துவச் சாதன உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம்

## மின்சார கார்களை சேவையாக வழங்கும் திட்டம்

- கன்வர்ஜென்ஸ் எனர்ஜி சர்வீசஸ் லிமிடெட் (CESL) நிறுவனமானது, அதன் மின்சார கார்களை சேவையாக வழங்கும் (EV as a Service) ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது.
- இது அடுத்த இரண்டு ஆண்டுகளில் அரசு அமைச்சகங்கள் மற்றும் பொதுத் துறைப் பிரிவுகளில் 5,000 மின்சார கார்களைப் பயன்படுத்துவதை இலக்காகக் கொண்டு உள்ளது.
- CESL ஆனது நாடு முழுவதும் 2,000 மின்சார கார்களை ஏற்கனவே அறிமுகப்படுத்தி உள்ளது மற்றும் சுமார் 17,000 மின்சாரப் பேருந்துகளை அறிமுகப்படுத்தவும் உள்ளது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## மிகப்பெரிய உணவு வேட்டை



- சில மணி நேரங்களில், 2 மில்லியனுக்கும் அதிகமான அட்லாண்டிக் காட் (பண்ணா மீன்) 10 மில்லியன் சிறிய கேப்லின்களை (அயிரை மீன்) உட்கொண்டுள்ளது.
- உட்கொள்ளப்பட்ட மீன்களின் எண்ணிக்கை மற்றும் உள்ளடக்கியப் பரப்பு ஆகிய இரண்டிலும் இந்த நிகழ்வுதான் இதுவரை பதிவானதில் மிகப்பெரியது.

- ஒவ்வொரு குளிர்கால அட்லாண்டிக் மீன் இனங்களும் நார்வே நாட்டுக் கடற்கரையில் முட்டையிடும் கேப்லின் மீன்களை உண்ணும்.
- இப்பகுப்பாய்வில் 23 மில்லியன் கேப்லின்கள் பல மைல்களுக்கு நீண்டுள்ள ஒரு மீன் திரளில் குழுவாக இருப்பது தெரிந்தது.
- இந்த மீன் திரள் ஆனது 2.5 மில்லியன் காட் மீன்களை ஈர்த்தது என்ற வகையில் அவை மாபெரும் குழுவை உருவாக்கி 10.5 மில்லியன் கேப்லின் மீன்களை உண்டன.

## யூரேசிய நீர்நாய் – மகாராஷ்டிரா



- புனே மாவட்டத்தில் உள்ள இந்தாபூரில் இந்தப் பகுதியில் இதற்கு முன் பதிவு செய்யப் படாத ஓர் அரிய வகை யூரேசிய நீர்நாய் மீட்கப்பட்டது.
- யூரேசிய நீர்நாய் இந்தியாவில் அரிதாகவே காணப்படுகிறது.
- அவை முதன்மையாக இமயமலை அடிவாரங்கள், வட கிழக்குப் பகுதிகள் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் ஆங்காங்கே சில பகுதிகளில் மட்டுமே காணப் பட்டன.
- நீர் மாசுபாடு மற்றும் வாழ்விட இடையூறுகளால் மிக அதிகம் பாதிக்கப்படும் இவை தனித்துக் காணப் படும் என்பதோடு இவை முதன்மையாக இரவு நேரங்களில் இயங்கும் உயிரினங்கள் ஆகும்.
- நதி சுற்றுச்சூழல் அமைப்புகளில் உயர் மட்ட வேட்டையாடி இனங்களாக உள்ள இவை மீன்களின் எண்ணிக்கையை ஒழுங்குபடுத்தவும் சுற்றுச்சூழல் சமநிலையை நன்கு பேணவும் உதவுகின்றன.
- யூரேசிய நீர்நாய் (லூட்ரா லூட்ரா) என்பது இந்தியாவில் காணப்படும் மூன்று நீர்நாய் இனங்களில் ஒன்றாகும்.
- மற்ற இரண்டு இனங்கள் - மென்மையான தோல் கொண்ட நீர்நாய் (லுடரோகேல் பெர்ஸ்பிசில்லாட்டா) மற்றும் சிறிய நகம் கொண்ட நீர்நாய் (ஆனிக்ஸ் சினேரியஸ்) ஆகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உணவு மற்றும் வேளாண்மையின் நிலை குறித்த அறிக்கை 2024

- 2024 ஆம் ஆண்டு உணவு மற்றும் வேளாண்மையின் நிலை குறித்த அறிக்கையினை ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) வெளியிட்டு

உள்ளது.

❖ இது உலக மக்கள் தொகையில் 99 சதவீதத்தினை உள்ளடக்கிய 153 நாடுகளுக்கான அளவிடப்பட்ட மறைமுகச் செலவினங்களைப் பகுப்பாய்வு செய்தது.


❖ இதில் ஒட்டு மொத்தமாக, 156 நாடுகளில், வேளாண் உணவு முறைகளின் மறைமுகச் செலவினங்கள் ஆண்டிற்கு சுமார் 12 டிரில்லியன் டாலர் ஆகும்.

❖ இந்த எண்ணிக்கையில், சுமார் 70 சதவீதம் (8.1 டிரில்லியன் டாலர்) ஆரோக்கியமற்ற உணவு முறைகளால் உருவானது.

❖ இந்தியாவின் மொத்த வேளாண் உணவு முறைகளின் சில மறைமுகச் செலவினங்கள் ஆனது ஆண்டிற்கு 1.3 டிரில்லியன் டாலர் ஆகும்.

❖ இது பெரும்பாலும் ஆரோக்கியமற்ற பல்வேறு உணவு முறைகள் மற்றும் தொற்றாத நோய்களுடன் தொடர்புடைய உணவு அபாயங்களால் உண்டாகிறது.

FIGURE 1 GLOBAL MAP OF THE AGRIFOOD SYSTEMS TYPOLOGY




## மாநிலச் செய்திகள்

### NAWO-DHAN திட்டம்




❖ கேரளாவின் வேளாண்மைத் துறையானது, புதிய வேளாண் வள வாய்ப்புகள் – தோட்டக் கலை வேளாண் வணிக வலையமைப்பினைத் தீவிரப் படுத்துதல் (NAWO-DHAN) திட்டத்தின் கீழ் ஒரு சோதனைத் திட்டத்தைத் தொடங்க திட்டமிட்டுள்ளது.

- NAWO-DHAN திட்டத்திற்காக அக்டோபர் மாதத்தில் வெளியிடப்பட்ட ஈடுபாடு விருப்ப ஆவணத்திற்கு (EoI) சுமார் 22 நில உரிமையாளர்கள் மற்றும் 149 விவசாயிகள் இது வரையில் விருப்பம் தெரிவித்துள்ளனர்.
- இந்தத் திட்டத்தின் கீழ், விவசாயிகளின் குழுக்கள் ஆனது, சேவை நிலை ஒப்பந்தங்கள் மூலம் குறிப்பிட்ட நிலத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லாமல், 'விவசாயத்தினை ஒரு சேவையாக' கருதி சாகுபடியில் ஈடுபடும்.
- காய்கறிகளில் வருடாந்திர உற்பத்தி-தேவை இடைவெளி ஆனது 13.76 லட்சம் மெட்ரிக் டன்களாகவும், பழங்களில் 14 லட்சம் மெட்ரிக் டன்களாகவும் உள்ளன.

# விளையாட்டு செய்திகள்

## FIH ஹாக்கி நட்சத்திர விருதுகள் 2024




- 2024 ஆம் ஆண்டின் FIH நட்சத்திர விருதுகளின் போது யிப்பி ஜான்சன் (நெதர்லாந்து) மற்றும் ஹர்மன்ப்ரீத் சிங் (இந்தியா) ஆகியோர் ஹாக்கி போட்டிகளில் ஆண்டின் சிறந்த வீரர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இந்திய அணியின் கோல்கீப்பர் P.R.ஸ்ரீஜேஷ், ஆண்டின் சிறந்த ஆடவர் கோல்கீப்பர் விருது பெற்றார்.
- சீனாவின் யே ஜியாவோ ஆண்டின் சிறந்தப் பெண் கோல்கீப்பராக விருது பெற்றார்.
- பாகிஸ்தானின் சுஃப்யான் கான், ஆண்டின் ஆடவர்களுக்கான எழுச்சி நாயகன் என்ற விருதினைப் பெற்றார்.
- அர்ஜென்டினாவின் ஜூ டியாஸ், இந்த ஆண்டின் மகளிருக்கான எழுச்சி நாயகி என்ற விருதினைப் பெற்றார்.

# முக்கிய தினங்கள்


## உலக நகரமயமாதல் தினம் - நவம்பர் 08

- பியூனஸ் அயர்ஸ் பல்கலைக் கழகத்தின் மறைந்த பேராசிரியர் கார்லோஸ் மரியா டெல்லா பாலோரா 1949 ஆம் ஆண்டில் இந்த நாளை நிறுவினார்.
- நன்கு வாழக் கூடியச் சமூகங்களை உருவாக்குவதில் திட்டமிடுதலின் ஒரு பங்கை இது அங்கீகரித்து ஊக்குவிக்கிறது.
- நமது சமூகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வீட்டுவசதிகளைப் பெருமளவில்

வழங்குவதிலும், அனைவருக்கும் சமமான, உள்ளடக்கிய வகையிலான மற்றும் நீடித்த நிலையான வகையிலான தீர்வுகளை உருவாக்க உதவுவதிலும் திட்டமிடல் மற்றும் திட்டமிடுபவர்களின் பங்கினை இத்தினம் கௌரவிக்கிறது.




## உலகப் புலி வண்டு தினம் - நவம்பர் 11





- இந்தியாவிலும் உலக அளவிலும் புலி வண்டுகள் பற்றிய ஒரு ஆய்வுக்கு அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக டாக்டர் பியர்சன் அவர்களைக் கௌரவிப்பதற்காக அவரது பிறந்த நாளன்று இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- இந்தியாவில் 241 வகையான புலி வண்டுகள் உள்ளன.
- உலகில் புலி வண்டுகளின் எண்ணிக்கையில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- புலி வண்டுகள் பூச்சி உலகின் முதன்மையான வேட்டையாடி இனங்கள் ஆகும் என்ற

நிலையில் அவை மற்ற பூச்சிகளின் எண்ணிக்கையைச் சீரமைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

- இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பதிவு செய்யப்படாத மயிலாடுதுறை மற்றும் திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் காணப்பட்ட அப்டீரோசா குரோஷா போன்ற சில புலி வண்டுகள் தமிழ்நாட்டில் உள்ளன.
- 1987 ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் பதிவு செய்யப் பட்ட பிறகு மெழுகு உடல் கொண்ட புலி வண்டு (லோபிரா செரினா) இது வரை பதிவு செய்யப்படவில்லை.

## தேசிய கல்வி தினம் - நவம்பர் 11

- சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரான மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களின் பிறந்தநாளை இந்த நாள் கொண்டாடுகிறது.
- இவர் சவூதி அரேபியாவின் மெக்காவில் 1888 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் தேதி அபுல் கலாம் குலாம் முஹியுதீன் ஆக பிறந்தார்.
- சுதந்திரத்திற்குப் பிறகு, கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்ட ஆசாத் 1958 ஆம் ஆண்டு வரை பத்தாண்டுகள் பதவி வகித்தார்.
- அவர் இந்தியக் கலாச்சார உறவுகளுக்கான சபை (ICCR), சாகித்ய அகாடமி, லலித் கலா அகாடமி, சங்கீத நாடக அகாடமி மற்றும் CSIR ஆகியவற்றை அமைத்தப் பெருமைக்கு உரியவர் ஆவார்.
- 1951 ஆம் ஆண்டில் காரக்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், 1953 ஆம் ஆண்டில் பல்கலைக் கழக மானியக் குழு உட்பட புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களை நிறுவுவதில் அவர் முக்கியப் பங்கு வகித்தார்.
- 1992 ஆம் ஆண்டில் நாட்டின் உயரியக் குடிமகன் விருதான பாரத ரத்னா விருதானது அவரது மரணத்திற்குப் பின் அவருக்கு வழங்கப்பட்டது.




## உலகத் தரநிலை வாரம் - நவம்பர் 11 முதல் 15 வரை

- சார்ட்டர்ட் குவாலிட்டி இன்ஸ்டிடியூட் (CQI) அமைப்பு மூலம் இந்த வருடாந்திர நிகழ்வு அனுசரிக்கப்படுகிறது.

- இது பல்வேறு துறைகளில் தர மேலாண்மை வகிக்கும் முக்கியப் பங்கு பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, ' Quality: from Compliance to Performance' என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★